*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume – VII (1)**
**December - 2022**

# நல்லதங்காள் கதைப்பாடலின் கதையமைப்பு

.ஈஸ்வரன் இரா மற்றும் கணேஷ்வரி ப
முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: ratnames05094@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

வாய்மொழி இலக்கிய மரபிற்கு நாட்டுப்புறப் பாடல்கள் மிகப்பெரும் ஆவணமாகத் திகழ்கின்றன. நாட்டுப்புற இலக்கிய வகைமையில் ஒன்று கதைப்பாடல்கள். இது நாட்டுப்புற மக்களால் கதைகளாக வழிவழியாக வாய் மொழியாகப் பேசப்பட்டு பின்பு பாடலாகப் பாடப்படும் வடிவத்தைக் 'கதைப்பாடல்கள்' என்கிறோம். சமூக ஏற்றத்தாழ்வுகளை, வரலாற்றை, தெய்வங்களை எனப் பல பண்பாடு சார்ந்த கூறுகளைத் தமிழில் நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் காணலாம். உலகின் பல்வேறு நாடுகளில் காணப்படும் கதைப்பாடல்களிலெல்லாம் ஒருமித்த கதையமைவு இருப்பதை அமைப்பியல் ரீதியாக பல அறிஞர்கள் கண்டறிந்து விளக்குகின்றனர். நல்லதங்காள் கதைப் பாடலும் அதற்கு விதி விலக்கு அல்ல. செவிவழியாகப் பாடப்பட்டு வந்த நல்லதங்காள் கதைப்பாடலை வித்வசிரோன்மணியாகிய புகழேந்திப்புலவர் இயற்றியிருக்கிறார். இந்நூலை முதன்மை ஆதாரமாகக் கொண்டு அதில் வரும் கதை அமைப்புகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**குறிப்புச்சொற்கள் : கதையமைப்பு, கிராம தேவதைக் கதைப்பாடல், சமூகக் கதைப்பாடல், தெய்வக் கதைப்பாடல், வரலாற்றுக் கதைப்பாடல், நல்லதங்காள் கதைப்பாடல்.**

## முன்னுரை

நாட்டுப்புறப் பாடல்களில் ஒன்று கதைப்பாடல்கள் ஆகும். நாட்டுப்புற இலக்கியங்களில் மிக முக்கியமானதாகவும் இது கருதப்படுகிறது. இவை நாட்டுப்புற மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வந்தவை. நல்லதங்காள் கதைப்பாடல் தமிழகத்தில் உள்ள சோகமான கதைப்பாடல்களுள் ஒன்றாகும். திருவில்லிபுத்தூர் அருகேயுள்ள அர்ச்சுனாபுரத்தில் உண்மையிலேயே வாழ்ந்து, மறைந்த ஒரு பெண்ணினுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும்

கதைப்பாடல் நல்லதங்காள் கதைப்பாடல் ஆகும். நல்லதங்காள் கதைப்பாடலின் பண்புகளையும் கருத்துகளையும் கருத்துருவாக்கங்களையும் கதை அமைப்பு முறையினையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது. கதைப் பாடல்களுக்கு மரபு இலக்கண வரையறை கொடுக்க இயலாது என்றாலும் நல்லதங்காள் கதையும் காப்பிய அமைப்பை ஒத்துத் திகழ்கிறது. கதைப்பாடல்களில் காணப்படும் அடிப்படைக் கதைக்கருவாகிய காப்பு, நாட்டுவளம், குழந்தை இல்லாமை, தவம் செய்தல், கருவுறுதல், பிள்ளை பிறத்தல், அண்ணன்மாரைப் பிரிந்து செல்லுதல், திருமணம், கனவு, பஞ்சம், இறப்பு, தண்டனை, தெய்வமாதல், வழிபடல், வாழ்த்து என்ற மையக் கருத்துக்களின் அடிப்படையில் நல்லதங்காள் கதையமைப்பு அமைந்திருக்கிறது என்பதை இவ்ஆய்வு புலப்படுத்துகிறது.

## கதைப்பாடல் வரிசையில் நல்லதங்காள்

கதைகளைப் பாடலாகப் பாடுகின்ற மரபு அமைந்த பாடல்களைக் கதைப்பாடல்கள் எனலாம். பாடல்கள் வழி கதையை உணர்த்துவதாகவும் கொள்ளப்படுகிறது.

**தெய்வக் கதைப்பாடல்**
**வரலாற்றுக் கதைப்பாடல்**
**சமூகக் கதைப்பாடல்**
**கிராம தேவதைக் கதைப்பாடல்**

**(நல். ப.1)**

ஆகியவற்றுள் நல்லதங்காள் கதைப்பாடல் சமூக மற்றும் வரலாற்றுக் கதைப்பாடல் வரிசையில் வருகிறது. "கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையானது மக்களது நாவில் திகழ்கிறது. இதை இயற்றியவர் யாராக இருப்பினும் பாடுபவரது உரிமையாக மாறிவிடுகிறது. இதற்கு முன்னுரையும் பின்னுரையும் விளக்கமும் தேவையில்லை"[1] என்று கதைக் களஞ்சியம் விளக்கமளிக்கிறது. எனவே தான் கதைப்பாடல்கள் இலக்கிய வடிவில் இருப்பினும் எளிமையாகப் புரிகின்றன. நா.வானமாமலை "கதைப் பாடல்கள் வரலாறுகள் அல்ல. அவை வீர காவியம். மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் பாடல் என்றே கொள்ள வேண்டும்"[2] என்று விளக்கமளிக்கிறார். நல்லதங்காள் கதைப்பாடல் உண்மை நிகழ்வு என்று நம்பப்படுகிறது. இன்றும் திருவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள அர்ச்சுனாபுரம் பகுதியில் நல்லதங்காள் வாழ்ந்ததற்கான சுவடுகள் காணக்கிடைக்கின்றன. நாட்டுப்புற வழிபாட்டு முறைகளில் நல்லதங்காள் தெய்வமாக வழிபடப்படுகிறாள். எனவே நல்லதங்காள் கதைப்பாடலைச் சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்கள் என்று கருதலாம்.

## கதை அமைப்புக் கூறுகள்

கதை இலக்கியத்திற்கு கதை அமைப்புக் கூறுகள் முக்கியமான அம்சமாகத் திகழ்கின்றன. கதைப்பாடல்கள் பொதுவாகப் படிப்பவருக்கும், கேட்பவருக்குமான புரிதலுக்கு இக்கதை அமைப்புக் கூறுகள் பெரிதும் உதவுகின்றன. உலகக் கதைப்பாடல் இலக்கியங்களுக்கெல்லாம் ஓர் ஒருமித்த

அமைப்பு முறை உண்டு. அதை நல்லதங்காள் கதைப்பாடலிலும் காணலாம். முக்கியக் கதாப்பாத்திரங்கள், முரண்பாடுகள், மோதல்கள் போன்ற நிலைகள் நல்லதங்காள் கதைப்பாடலிலும் இடம்பெறுகிறது. முக்கியக் கதாப்பாத்திரங்களாக நல்லதங்காள், நல்லதம்பி, காசிராஜன் மற்றும் மூளிஅலங்காரியும் துணைமைக் கதாப்பாத்திரங்களாக ராமலிங்க சேதுபதி, இந்திராணி, நல்லதங்காளின் குழந்தைகள் (4 – ஆண் குழந்தைகள், 3 – பெண் குழந்தைகள்) கருதப்படுகின்றன. குடும்ப உறவுகளுக்கிடையேயான முரண்பாடுகள், கணவன் மனைவி மோதல்கள் ஆகிய கதைக்கூறுகள் கதை அமைப்பிற்கு முக்கியத் தூண்களாகின்றன.

## காப்பு

நல்லதங்காள் கதைப்பாடல் கலிவிருத்தத்தால் அமையப்பெற்றது. கதைப்பாடலின் துவக்கத்தில் காப்புச் செய்யுள் இடம்பெறுகிறது. விநாயகரைத் துதி செய்யும் விதத்தனை,

**“தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள் வாராமல்**
**நம்பிக்கைவைத் தெந்தன் நாவில் குடியிருந்து**
**ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனெ முன்னடவாய்”**
**(நல். ப.2)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. முருகன், சரஸ்வதி, ஆகிய தெய்வங்களையும் வாழ்த்தும் காப்புப் பாடலும் இதில் இடம்பெறுகிறது.

## நாட்டுவளம்

காப்பியங்களில் இடம்பெறும் நாட்டுவளம், நகர்வளம், என்ற பகுப்பு முறையை நல்லதங்காள் கதைப்பாடலிலும் காணமுடிகிறது. அர்ச்சுனாபுரத்தின் எழில்மிகு காட்சிகளையும், ஊர்ப் பெருமைகளையும், நகர்ச்சிறப்புகளையும் கதைப்பாடலின் துவக்கத்தில் காணமுடிகிறது. அவ்வூர் மக்களின் உழைப்பினை,

**“வயலிற்களை பிடுங்கி மாதர்கள் போடுவார்கள்**
**குயலென்று தங்கள் கண்ணைக் கருதியே தேடுவார்கள்**
**தோள் மேலெடுப்பார்கள் சுமந்து நடப்பார்கள்**
**ஆள்மேலெடுப்பார்கள் அசைந்து நடப்பார்கள்”**
**(நல். ப.3)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. முப்போகம் விளையும் நகரத்தால் அவ்வூரின் செல்வச் செழிப்பை, மக்கள் செல்வாக்கை அடுத்த நிலையில் வைத்துப் பாடியிருப்பதை அறியமுடிகிறது.

**“உப்பரிகை மாளியையும் உயர்ந்த பெருமாளிகையும்**
**செப்பரிய மாடங்களும் சேர்ந்த சித்திரக் கூடங்களும்”**
**(நல். ப.4)**

என்ற பாடலடிகள் நகர்ச் சிறப்பை உணர்த்துகின்றன.

## தவமும் வரமும்

நல்லதம்பியின் பெற்றோரான இராமலிங்க சேதுபதிக்கும், இந்திராணிக்கும் பல ஆண்டுகளாகக் குழந்தையில்லாத காரணத்தினால் கானக வாழ்க்கை மேற்கொண்டு சிவபெருமானைத் தொழுது வணங்கவே குழந்தை பாக்கியம் கிடைத்தது. பின் நல்லதங்காள் நல்ல தம்பி இருவரும் பிறக்கின்றனர். இயல்பாகவே நாடாளும் உரிமை நல்லதம்பிக்குக் கிடைக்க பெற்றோரை இழந்து பொறுப்பெல்லாம் நல்லதம்பிமேல் விழுகிறது.

**"தவசுக்குத்தான் மகிழ்ந்து தக்கமைந்கனைக் கொடுப்பீர்**
**சிவபெருமான் கண்டு சிந்தைமகிழ்ச்சி கொண்டு**
**விருது பெற மைந்தனை விரும்பிக் கொடுத்தார்**
**பெண்ணொன் றுபிள்ளையொன்று பிறக்கும்படி கொடுத்தார்"**

**(நல். ப.7)**

என்ற பாடலடிகள் பெற்றோரின் தவத்தையும், பிள்ளை வரம் பெறுவதையும் குறிக்கிறது. கதைப்பாடலின் கரு இங்கே தொடங்குகிறது.

**திருமணச்சிறப்பு**

தமிழ்ச் சமுதாயக் குடும்ப அமைப்பில் திருமணம் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. பெற்றோரை இழந்த நல்லதம்பி தன் தங்கையை மணம் முடித்துக் கொடுக்க விரும்புகிறான். சிவகங்கை மாவட்டம், மானாமதுரையைச் சார்ந்த காசிராஜா என்ற ஆண்மகனுக்குத் திருமணம் முடித்துக் கொடுக்க 12 ஆண்டுகளில் பஞ்சம் வருகிறது. திருக்கல்யாணச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும் பாடல் வரிகளில் அவர்களின் பண்பாட்டினைக் காணலாம். சீதனமாக பால்பசு, ஆடு, துளசிமணி, கனகமணி, மார்புச்சரப்பளி, ஆறுலட்சும் பெண்கள், வாழமரச்சோலைகள், கிளாமரங்களும் விளாமரங்களும், குத்தும் உலக்கை, ஆகியவற்றோடு இன்னும் பல சீதனங்களும் தங்கைக்குக் கொடுத்துத் திருமணம் செய்து வைத்தான்.

**"பட்டி நிறைந்திருக்கும் பால்பசுவாம் சீதனங்கள்**
**ஏரி நிறைந்திருக்கும் எருமைமாடாஞ் சீதனங்கள்**
**வேட்டுக்கழனி முளக்களனி சீதனங்கள்**
**பள்ளக் கழனி பயிர்க்கழனி சீதனங்கள்"**

**(நல். ப.10)**

என்ற பாடலடிகளில் நல்லதங்காள் பெற்ற சீதனத்தை உணர்த்துகிறது. கதையின் அடுத்தகட்ட நகர்விற்கு பண்பாட்டைப் பறைசாற்றும் திருமண நிகழ்வு ஒரு காரணமாக அமைகிறது.

**பஞ்சகாலம்**

நல்லதங்காள் கதையின் திருப்பத்திற்கு முக்கியப் புள்ளியாகத் திகழ்வது பஞ்சகாலம் ஆகும். செல்வச் செழிப்பையும் சுகபோகங்களையும் மட்டுமே கூறிக்கொண்டிருந்த கதைப்பாடல் இந்த மையப்புள்ளியிலிருந்து தான் பஞ்சத்தையும், சோகத்தையும் மரணத்தையும் பாடுகிறது.

**"தாலிதவிர வைத்து தங்கமெல்லாம் விற்று உண்டாள்**
**மாலைதவிர வைத்து மற்றதெல்லாம் விற்று உண்டாள்**
**ஆலாத்திப் பெண்களிலே ஆறுலட்சம் விற்று உண்டாள்**
**பாக்கு நறுக்கியிடும் பணிப்பெண்ணை விற்று உண்டாள்"**

**(நல். ப.12)**

என்ற பாடலடிகள் நல்லதங்காள் பஞ்சகாலத்தில் தன்னிடம் இருந்த செல்வங்களையெல்லாம் விற்று உயிர்வாழ்ந்த சூழலை விவரிக்கிறது. தன் கணவன் பேச்சையும் கேட்காது நல்லதங்காள் அண்ணன் வீடு நோக்கிப் புறப்படுவது கதைப்பாடலின் முடிவிற்குத் துவக்கமாகிறது.

**கனவு**

செல்வங்களையெல்லாம் இழந்து, ஒரு வேளைச் சோற்றுக்கும் உணவில்லாது நல்லதங்காளும், குழந்தைகளும்

துன்பப்படுகின்றனர். அதனைக் குறிப்பால் கனவுவழி நல்லதம்பி உணர்கிறான். இதனை,

**"தாலிதரித்துக் கொண்டு தன்புருஷன் வீடுவந்து**
**நாற்பத்தொரு வருஷம் நலமாக வாழ்ந்திருந்து**
**ஏழுபிள்ளை பெற்றமவள் இருக்கின்ற வேளையிலே**
**பொல்லாத காலமது சொல்லாமல் வந்ததுவாம்**
**தூங்கி எழுந்திருந்தான் துய்யகனா கண்டது போல்"**

**(நல். ப.16)**

என்ற பாடல் வரிகள் பின் நிகழப்போவதை நல்லதம்பி கனவின் மூலம் அறிவதை உணர்த்துவதாய் அமைகிறது. கதைப்பாடல் திருப்பப் புள்ளியிலிருந்து சரிவடைகிறது. குடும்ப அமைப்பு சிதைந்து வன்முறை வெடிக்கிறது. தன் அண்ணனைத் தேடி வரும் நல்லதங்காளுக்கு அவமானங்களே மிஞ்சுகிறது. பசியால் வாடும் தன் பிள்ளைகளைக் கானகம் கூட்டிச்சென்று கிணற்றில் விழுந்து அனைவரும் இறந்துபடுகின்றனர். நல்லதங்காளின் பிள்ளைகள் சாவதற்கு மறுத்து அழுத காட்சி சோகத்தின் உச்சகட்ட கண்ணீர்ப் பெருக்கை வரவழைக்கிறது.

**"என்னைத்தான் கொல்ல வேண்டாம் என்னைப் பெற்ற மாதாவே**
**போனதெல்லாம் போகட்டும் இருவர் பிழைத்திடுவோம்**
**அப்போது நல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்**
**வாடாயப்பாயென் மனனே கூடியிறந்திடுவோம்"**

**(நல்.ப.31)**

என்று எல்லாக் குழந்தைகளையும் கிணற்றினுள் போட்டுப் பின் தானும் மாண்டுவிட்டாள்.

**உறவுச்சிக்கல்**

குடும்பத்தில் இருக்கும் உறவுமுறைச் சிக்கலையும், பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்ற நிலைப்பாட்டினையும் இக்கதைப்பாடலில் காணலாம். கணவனின் தங்கைக்கு உதவாத மூளிஅலங்காரி, தன் கணவனால் கொலை செய்யப்படுகிறாள்.

**நல்லதங்காள் வழிபாட்டுத் தெய்வமாதல்**

அண்ணன் தங்கை பாசத்தைக் கண்டு சிவனும் பார்வதியும் நேரில் வந்து அவர்களை உயிருடன் மீட்டதாகவும் மீண்டும் மனிதப்பிறவியை மறுத்த நல்லதங்காளும் நல்லதம்பியும் இறந்த இடத்திலே தெய்வமாக்கப்பட்ட நிகழ்வையும் கொண்டு கதை முடிக்கிறது. திருவில்லிபுத்தூருக்கு அருகில் அர்ச்சுனாபுரத்தில் "நல்லதங்காள் திருக்கோயில்" அமைந்துள்ளது. தரித்திரம் நீங்க வழிபடவேண்டிய கோயில்களுள் நல்லதங்காள் திருக்கோயிலும் ஒன்று.

**முடிவுரை**

கி.பி 15ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த உண்மை நிகழ்வை சமூக வரலாற்றுச் சார்பில் கதைப் பாடலாக அமைத்திருக்கின்றனர். நாட்டுப்புற மக்கள் வாய்வழியாப் பாடி கதை சொல்லும் மரபில் கதைப்பாடலின் அமைப்புக் கூறுகள் கச்சிதமாகப் பொருத்தி வந்திருக்கின்றன. மற்றபிற கதைப் பாடல்களில் இடம்பெறும் கதைக்கூறுகளைப் போல காப்பு, நாட்டுவளம், குழந்தை இல்லாமை, தவம் செய்தல், கருவுறுதல், பிள்ளை பிறத்தல், அண்ணன்மாரைப் பிரிந்து செல்லுதல்,

திருமணம், கனவு, பஞ்சம், இறப்பு, தண்டனை, தெய்வமாதல், வழிபடல் எனக் கதை அமைப்பிற்குத் தேவையான கூறுகளால் கதைப்பாடல் பின்னப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**


1. கலைக்களஞ்சியம் (1966). தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, 186-187
2. வானமாமலை நா, (1974). மொழியல்லாத நாட்டுப் பண்பாட்டுச் சான்றுகளைப் பொருள் கொள்ளும் முறை, ஆராய்ச்சி மலர், இதழ் 3.
3. லார்ட் ஆல்பர் பி (1976). த சிங்கர் ஆம் டெஸ்ஸ் - அததெனகம், நியூயார்க்
4. புகழேந்திப்புலவர், நல்லதங்காள் கதை, ஸ்ரீ மகள் கம்பெனி, சென்னை.1